மாலை முரசு

பக்கங்கள் 15+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 07 ஞாயிற்றுக்கிழமை 19.01.2025 | அதிர்வு 171

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

(எஸ்.கீதபொன்கலன், கே.ஏ.ஹமீட்)


நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நாளை

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஏப்ரல் 10 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல்?




இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 5 மற்றும் 10 ஆம் திகதிக்கு இடைப்பட்டதொரு நாளில் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்தும் நிலைப்பாட்டில் அரசு உள்ளது. இதற்கமைய ஏப்ரல் 10 ஆம் திகதி அரசின் தேர்வாக உள்ளது என்று அறியமுடிகின்றது.

03

## மன்னார் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்:

# இராணுவச் சிப்பாய் உட்பட மூவர் கைது!



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிவான் நீதிமன்றத் துக்கு முன்பாக இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவத்தில் பணியாற்றும் ஒரு சிப்பாய் உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலைப் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

03



# முன்னாள் அமைச்சர் விஜேமுனி கைது!

சட்டவிரோதமான முறையில் பாரவூர்தி ஒன்றைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்சா கைது செய்யப்பட்டுள்ளார்.

03

# ஆற்றுக்குள் கார் வீழ்ந்து இருவர் பரிதாப மரணம்!

கார் ஒன்று வீதியை விட்டு விலகி ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

03

# மர்மமான முறையில் மீட்கப்பட்ட 2 சடலங்கள்

பன்னல – கங்கானியம்முல்ல வனப்பகுதியில் இன்று காலை இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

03

# மூத்த ஊடகர் விக்டர் ஐவன் காலமானார்



03

# தீர்வு இல்லையேல் வீதியில் இறங்குவோம்!

## அநுர அரசுக்கு திகாம்பரம் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை

(க.கிஷாந்தன்)

“மலையக மக்களுக்கான உரிமைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லையேல் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடவும் தயங்க மாட்டோம்.”

03





# பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக 4 வான்கதவுகள் திறப்பு!

## மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

(கி.வசந்தன்)

வவனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அதன் 4 வான்கவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களைத் தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகள் 6 அங்குலத்திற்குத் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர் பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியா பாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் எனவும், நெளுக்குளம் - நேரியகுளம் வீதி ஊடாக பயணிப்பவர்களும் அவதானமாகப் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# குளத்தில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

## பயணித்த சைக்கிளும் கண்டெடுப்பு



யாழ். புங்குடுதீவு பகுதியில் உள்ள குளம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக வீட்டில் இருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி வந்தனர்.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை மேற்படி நபர் அந்தப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்துக்கு அருகில் அவரது சைக்கிள் மற்றும் ஆவணங்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கல்கிஸையில் துப்பாக்கிச்சூடு

## ஒருவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில்

கல்கிஸை பகுதியில் இன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர் சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட துப்பாக்கிச்சூடு நடத்தியவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூத்த ஊடகர்...

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தனது 75 ஆவது வயதில் இன்று காலமானார்.

உடல்நலக் குறைவு காரணமாக சிறிது காலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று பிற்பகல் காலமானார்.

1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்த இவர், கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவராவார்.

இவர் ஏராளமான புத்தகங்களை எழுதியுள்ளார். மேலும் இவர் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சாரத் துறைகளுக்கு குறிப்பிடத்தக்க கருத்தியல் பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

### இராணுவச் சிப்பாய்...

இராணுவச் சிப்பாய் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் – நொச்சிக்குளம் பகுதியில் 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இருந்த நிலையில் விசாரணைகளுக்காகச் சென்ற சந்தேகநபர்கள் மூவர் உள்ளடங்களாக 4 பேர் மீது நீதிமன்றத்துக்கு முன்பாக வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட தேடுதல்களை மேற்கொண்ட நிலையில் சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் பேசாலை – நடுக்குடா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர் எனக் கருதப்படும் மேற்படி இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### மர்மமான...

சடலங்களுக்கு அருகில், அவர்கள் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று கண்டெடுக்கப்பட்டது என்று பன்னல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

37 வயதுடைய ஆண் ஒருவரும், 32 வயதுடைய பெண் ஒருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவர்கள் இருவரும் விஷம் அருந்தி இறந்திருக்கலாம் என அப்பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் ஆண் இராணுவச் சிப்பாய் என்றும், பெண் ஒரு ஆசிரியை எனவும் முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பன்னல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஏப்ரல் 10ஆம் திகதி...

எனினும், தேர்தல் திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும் என்பதால் ஏப்ரல் 5 மற்றும் 10 இற்கு இடைப்பட்டதொரு நாளில் தேர்தல் நடத்தப்படக்கூடும் என அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகப் புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்குரிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு மாகாண...

திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசேட விடுமுறைக்குப் பதிலாக எதிர்வரும் சனிக்கிழமை பதில் பாடசாலை நடத்தப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது.

### தீர்வு இல்லையேல்...

– இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொழிலாளர்தேசியசங்கத்தின்முக்கிய கூட்டம் நேற்று சனிக்கிழமை ஹட்டனில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு எதிர்கால அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளித்து உரையாற்றிய திகாம்பரம் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

“எதிர்க்கட்சியில் இருந்தபோது தேசிய மக்கள் சக்தி மக்களுக்குப் பல உறுதிமொழிகளை வழங்கியது. அந்தக் கட்சியினர் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆனால், அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேங்காய் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன பாரிய அளவில் குறைக்கப்படும் எனக் கூறப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. மின்சாரக் கட்டணத்தைக்கூட பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுதான் குறைத்துள்ளது.

தற்போது கூட்டுறவுத் தேர்தல்களில் அரசு தோல்வி அடைந்து வருகின்றது. எனவே, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசை வலியுறுத்துகின்றோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அரசுக்கு இருப்பதால் அரிசி மாபியாவுக்கு முடிவு கட்ட வேண்டும்.

கொள்ளையர்களைப் பிடிக்க வேண்டும். அரசின் வேலைத்திட்டங்களை அவதானித்து வருகின்றோம்.

அத்துடன், மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என்றார்கள், சம்பளம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றார்கள். அவற்றை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் அரசுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும். அவ்வாறு இல்லையேல் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கமாட்டோம்.” – என்றார்.

### ஆற்றுக்குள்...

இந்தச் சம்பவம் கண்டி – பன்வில பத்தேகம வீதியில் இன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விபத்தில் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### முன்னாள் அமைச்சர்...

வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் அவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவில் ஐந்து மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



# மாத்தறையில் கோர விபத்து!

## 61 பேர் படுகாயம்

மாத்தறை – கந்தர பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் 61 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் மாத்தறை, கண்டி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை – தங்கல்ல பிரதான வீதியில் உள்ள கந்தர தலல்ல பகுதியில் எம்பிலிப்பிட்டியவிலிருந்து மாத்தறைக்கும், மாத்தறையிலிருந்து தங்கல்லைக்கும் பயணித்த இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து குறித்து பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விபத்தில் இரண்டு பஸ்களும் பலத்த சேதமடைந்துள்ளன.



# யாழ். குருநகரில் திடீர் காற்றால் பல வீடுகள் சேதம்; நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் சந்திரசேகர்

**(த.சுபேசன்)**

யாழ். குருநகரில் திடீர் காற்றால் சேதமடைந்த இடங்களைக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் பார்வையிட்டார்.

பலத்த காற்று வீசிய நிலையில் முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் அங்குள்ள மாதா ஆலய திருப்பண்ட அறைகளும், படகுகள் சிலவும் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் நிலைமைகளை நேரில் சென்று கண்காணித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளார்.










# சேனநாயக்கா சமுத்திர வான்கதவு திறப்பு; அம்பாறைக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுப்பு!

(வி.ரி.சகாதேவராஜா, வடிவேல் டினேஸ்)

நாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டன. இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்துக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் கரையோரம் மற்றும் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை நேற்று (18) இரவு முதல் தொடர்ச்சியான கன மழை பெய்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் சேனநாயக்கா சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் இதன் வலதுகரை மற்றும் இடது கரை நீர் வெளியேறும் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் தாழ் நிலப்பகுதிகளில் வாழும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மஹா ஓயா பிரதான வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் பயணிப்பவர்கள் மாற்று வழியை உபயோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர் கொள்ளளவை பொறுத்து வான் கதவுகள் திறக்கப்படும் அளவுகளில் மாற்றம் ஏற்படலாம் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்திக்க அபே விக்ரம தெரிவித்துள்ளார்.

அத்துடன் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, பனங்காடு , திருக்கோவில், தாண்டி பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி அம்பாறை மஹாஓயா வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

இவ் வீதியால் ,போக்குவரத்துக்கு செய்வோர்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துவது உகந்தது எனக் கூறப்படுகிறது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இதுவா நட்பு?

"இலங்கையின் சிறந்த நண்பனாகவும் நிபந்தனையற்றதும் உறுதிமிக்கதுமான அயல் நாடாகவும் இந்தியா தொடர்ந்தும் செயற்படும்." - இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்திருக்கின்றார்.

அதுவும் இலங்கையின் வடக்கு யாழ் மாவட்டத்தில் வந்து நின்று கொண்டு இந்தக் கருத்தை அவர் வெளியிட்டமை விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்தியாவின் கடந்த கால செயற்பாடுகள் இலங்கையின் சிறந்த நண்பனாக அமைந்தனவா என்ற கேள்வி அவரது இந்தக் கருத்து வெளிப்பாட்டின் அடிப்படையில் எழுகிறது.

நண்பன் என்ற கருத்தியலில் இரண்டு விடயங்களை இந்தியாவுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது இந்தச் சமயத்தில் அயல் தேசமான இலங்கையின் - குறிப்பாக இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களின் - சார்பில் முக்கியமான கடமையாகிறது.

நண்பன் வேறு, பெரிய அண்ணன் வேறு. இரண்டு கதாபாத்திரங்களுக்கும் இடையில் பாரிய பொறுப்பு - கடப்பாடு - வேறுபாடு இருப்பது மறுக்க முடியாதது.

அதேசமயம் 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற கணக்கில் நண்பனாக இருப்பதும் அர்த்தமற்றது.

ஒரு காலத்தில் 'பெரியண்ணன்' கதாபாத்திரத்தைத் தானே எடுத்துக் கொண்டு இலங்கை விடயத்தில், இலங்கைத் தரப்புகளின் நண்பனாகத் தன்னைக் கருதாமல் பெரியண்ணனாக அதிகாரம் செலுத்திய இந்தியாவை இலங்கைத் தீவின் தமிழர் தேசமும், சிங்களவர் தேசமும் அவ்வளவு விரைவாக மறந்து விட முடியாது.

'பெரியண்ணன்' வேடம் போட்ட இந்தியா, அந்தச் சமயத்தில் அயல் தேசத்தின் சிறிய சகோதரர்களாகத் தான் கருதிய - அல்லது வெளிப்படுத்திக் காட்டிய - தமிழர் தேசத்திற்கும் நியாயமாக நடக்கவில்லை, சிங்கள தேசத்திற்கும் நியாயமாக நடக்கவில்லை என்பதுதான் யதார்த்தப் புறவுண்மை. அது மறைக்க முடியாதது.

எண்பதுகளில் பிற்பகுதிகளில் இந்தியா இலங்கையின் நண்பனாகவோ அல்லது இலங்கையில் பெரிதும் பாதிப்புற்ற சிறுபான்மையினரான தமிழர்களின் ஆபத்பாந்தவனாகவோ நேர்மையாக நடக்கவில்லை. பெரியண்ணன் பொறுப்பைத் தன் மேலாதிக்கத்தால் தன்பாட்டில் சுவீகரித்துக் கொண்டு, தனது விருப்பு, வெறுப்புக்கள் மற்றும் பூகோள நலன்கள் ஆகியவற்றுக்காக இரண்டு தரப்பையும் தன் பிராந்திய வல்லாதிக்க மேலாதிக்கத்தால் அது அடக்க முற்பட்டது என்பதுதான் உண்மை. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைத் தருகின்றேன் என்று இந்திய உபகண்டம் இலங்கை மீது வல்வந்தமாகத் திணித்த தீர்வு முயற்சியில் கூட சம்பந்தப்பட்ட எவருக்கும் இந்தியா நேர்மைத் திறனுடன் உண்மையாக நடக்கவில்லை.

இப்போதும் கூட, தன்னுடைய மற்றைய அயல் தேசங்கள் போல இலங்கையும் தன் கட்டுப்பாட்டை விட்டு நழுவி, சீன ஆதிக்க ஆதரவோடு இந்தியாவுக்கு நிகராக எழுந்து நிற்க முற்படுகின்ற போது, அதை சமாளிப்பதற்காக பெரியண்ணன் வேடத்தை வேறு வழியின்றிக் கைவிட்டு, நண்பன் வேடத்திற்கு அது தன்னைப் பச்சோந்தித்தனமாக மாற்றிக் கொள்கின்றது என்பதுதான் தமிழர்களின் கணிப்பு.

இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தி தானென்ற மமதையில, முன்னர் பெரியண்ணன் வேடத்தை தானே சுவீகரித்துக் கையில் எடுத்துக்கொண்டு, இலங்கை தீவின் தேசிய இன பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் தன்நலனின் அடிப்படையில் தான் திணித்த தீர்வு முயற்சியில் கூட இந்தியா இப்போது நியாயமாகச் செயல்படவில்லை.

தன்னை விட்டு சீனா பக்கம் சாயும் கொழும்பைத் தாஜா பண்ணி, தன் தன் வலைக்குள் வீழ்த்துவதற்காக தான் கொண்டு வந்த தீர்வு திட்டம் என்று மாகாண சபை முறைமையை - அதை உறுதிப்படுத்துகின்ற இலங்கையின் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை - கைவிட்டு, அதன் மூலம் தமிழர்களையும் நட்டாற்றில் அந்தரிக்க விட்டு, அதன் பேரில் கொழும்போடு பேரம்பேசி, தன் வழிக்குக் கொழும்பைக் கொண்டுவர புதுடில்லி முயல்கின்றது என்பதுதான் இப்போது வெளிப்படையான நிலைமை.

அதாவது சிறுபான்மையினரான தமிழர்களின் தனித்துவத் தேசிய நலனில் அக்கறையும், அதை நிலை நாட்டுவதில் கடப்பாடும், பொறுப்பும் உள்ளதாக இதுவரைத் தான் காட்டிக் கொண்டு வந்த விடயத்தை, இப்போது பேரம் பேசும் விவகாரமாக வைத்து, கொழும்பைக் கையில் போட புதுடில்லி முயல்கின்றது. இதுவரை காலமும் பெயருக்காவது தான் வலியுறுத்தி வந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை இப்போது புதுடில்லி கைவிட்டிருப்பது இதனால்தான். அதாவது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தான் இருப்பதாக காட்டிக் கொண்டு, அந்த ஆதரவை விட்டுக் கொடுத்து அதன் மூலம் கொழும்பை வளைக்க புதுடில்லி ராஜதந்திரம் முயல்கிறது. பாலுக்குக் காவலனாக காட்டிக் கொண்டு பூனைக்கும் தோழனாகும் அற்ப நண்பனின் போக்கு இது....!





# தைபொங்கலை முன்னிட்டு கிரிக்கெட் சுற்று; ரெட்பெக் இகல் அணி சம்பியனாகத் தெரிவு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

தைபொங்கள் விழாவை முன்னிட்டு சூப்பர் ஸ்டார் விளையாட்டு கழகத்தால்15 ஆவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்றும் நேற்று முன்தினமும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது எட்டு அணிகள் பங்கு பற்றியன. இறுதிப் போட்டிக்கு ரெட்பெக் இகல் மற்றும் குயின்ஸ் லேண்ட் புளு ஆகிய அணிகள் தெரிவாகிப் போட்டியில் பங்கு பற்றின. இதில் ரெட்பெக் இகல் அணி முதலில் துடுபாட்டத்தை மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்களில் 03 விக்கட்டுகளை இழந்து 53 ஓட்டங்களை பெற்றது.

54 எனும் இலக்கை நிர்ணயித்துப் பதிலுக்குத் துடுபடுத்தாடிய குயின்ஸ் லேண்ட் புளு அணி நான்கு விக்கட்டுகளை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது.



இதில் முதலாம் மற்றும் இரண்டாவது இடங்களை பெற்ற அணிகளுக்கு கேடயங்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த போட்டிக்கு பிரதம அதிதியாக பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான சுகததாச கலந்து கொண்டார்.








# சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் சுகாதாரம் இல்லாவிட்டால் முறையிடலாம்!

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி மூலமான முறைப்பட்டைத் தொடர்ந்து அதன் உண்மைத்தன்மையை அறிய சாய்ந்தமருதின் உணவு கையாளும் சில நிறுவனங்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதி காரி டாக்டர் ஜே.மதன் வழிகாட்டலில் இன்று (19) சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் பரிசீலனைகளை மேற்கொண்டார்.

இதன்போது சுகாதார சீர்கேடான உணவங்களுக்கு எச்சரிக்கையும், அறிவுறுத்தலும் கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் தொடக்கம் அனுமதிப்பத்திரம், ஊழியர் வைத்திய சான்றிதழ் இல்லாமை மற்றும் முறையான கழிவு நீர் தொட்டி இல்லாமை, குளிர்சாதனப் பெட்டிகள் முறையாக பராமரிக்காமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, உணவு தயாரிக்கும் இடங்களைச் சுகாதாரமாகப் பேணாமை போன்ற உணவகங்கள், பேக்கரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்பும் ஆகும். ஆகவே பொது மக்கள் தங்களின் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் 0753333453, 0776702703, 0706702709 எனும் இலக்கங்களுக்கு அறியத்தரலாம் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பொது மக்களைக் கேட்டுள்ளார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் மருதமுனையில் ஒருவர் கைது!

## விசேட அதிரடிப் படையினர் நடவடிக்கை

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலை வீதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

பெரியநீலாவணை 02, மருதமுனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 20 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர், சான்றுப் பொருள்களுடன் சட்டநடவடிக்கைக்காக பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.






# சுகாதார நிலையங்களுக்கு அரச காணி ஆவணங்கள்!

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை-03 மற்றும் மலையடிக்கிராமங்களில் உள்ள சுகாதார நிலையங்களுக்கு அரச காணி ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனிடம் காணி ஆவணங்கள் முறையாகக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் டி.கே.எம் ஜவாஹீர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.





# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பு செயலகத்தில் மரநடுகை!

(பழுவூரான்)

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயகாவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் மர நடுகை வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில், பொது மக்கள் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகாமையில் கமுகு மரங்கள் நடப்பட்டன.

அத்தோடு மாவட்ட செயலக வளாகத்தை அழகுபடுத்திச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சேவைக்காக நாடிவரும் பொது மக்கள் தமது தேவைகளை அசௌகரிகமின்றி துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் இந்த வேலைத் திட்டத்தின் ஊடக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலகக் கணக்காளர் எம். வினோத், மாவட்ட தகவல் பொறுப்பதிகாரி வீ. ஜீவானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மதுரங்குளி ஸ்ரீமாபுர மக்களுக்கான இலவச குடிதண்ணீர் திட்டம் ஆரம்பம்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

மதுரங்குளி பத்தாம் கட்டை ஸ்ரீமாபுரம் ஜும்ஆப் பள்ளி வளாகத்தில் குடிதண்ணீர் திட்டம் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் கஜுவத்தை முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் இஸட். ஏ. ஸன்ஹீரின் வேண்டுகோளுக்கு இணங்க நாராமலையைச் சேர்ந்த சாஹுல் ஹமீத் முஹம்மது நபாயிஸ் தனது சொந்த நிதி மூலம் சுமார் 22 லட்சம் செலவில் இந்தத் திட்டத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்த நிகழ்வில் உலமாக்கள், மதத் தலைவர்கள், மதுரங்குளி பொலிஸ் நிலைய அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் இந்தத் திட்டத்துக்கு முழுமையாக நிதி உதவி வழங்கிய எஸ். எச். எம். நபாயிஸ் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.







# வாழைச்சேனை மக்களுக்கு உலருணவு!

(ந.குகதர்சன்)

மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஞாபகார்த்தமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற நூறு குடும்பங்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் உலருணவுப் பொருள்கள் வாழைச்சேனையிலுள்ள பேரவை அலுவகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற நூறு குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதிமிக்க உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்துக்காக கௌரி சங்கரி தவராசா ஞாபகார்த்த அறக்கட்டளையின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா ஒரு லட்சத்துப் 15 ஆயிரம் நிதியுதவியை வழங்கியிருந்தார். மிகுதி நிதி மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் ஊடாக வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற உதவி வழங்கும் திட்டத்தில் பேரவை இணைப்பாளர் ந.குகதர்சன் மற்றும் உறுப்பினர்களான சி.தயாபரன், சா.யோகநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# தலவாக்கலை கதிரேசன் ஆலய தைப்பூச தேர் கலந்துரையாடல்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்த தைப்பூச தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஆலய பரிபாலன சபைத் தலைவர் தர்மராஜ் தலைமையில் இன்று (19) விசேட கூட்டம் இடம்பெற்றது.

தலவாக்கலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உடுகம மற்றும் போக்குவரத்து பொலிஸார் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது, நடைபெறவிருக்கும் தேர்த் தேர்த் திருவிழாவின்போது தலவாக்கலை பொலிஸாரின் பூரண ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



# வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கிவைப்பு

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தைச் சேர்ந்த 41 மீனவர்களுக்கு இந்திய அரசின் உதவியாக மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதவர் சந்தோஷ் ஜாவால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் சாய்முரளியும் கலந்து கொண்டார்.








### நிவாரணம் வழங்கல் தொடர்பில்

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர் மட்டு. அரச அதிபருடன் கலந்தாய்வு!

(பழுவூரான்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளைத் தலைவர் கே. விமலநாதன் தலைமையிலான குழுவினர் பருவப் பெயர்ச்சி மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகளை வழங்குவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஆரம்ப கட்ட கலந்துரையாடலே இன்று ஞாயிற்றுக்கிழமை (19) பழைய மாவட்ட செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்டத்தில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிராம சேவையாளரின் பரிந்துரைக்கு அமைவாக இந்த நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் நிவாரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி காயத்திரி ரமேஷ், உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதித் திட்ட மிடல் பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் ஆர். ராஜ்குமார், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத், அனர்த்த நிவாரண சேவை அதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மண் பற்றுடன் வாழ்ந்த பேராளுமை குழந்தை சண்முகலிங்கம்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

ஈழத்து தமிழ் நாடகத்தின் பெரு விருட்சம், நாடக அரங்க கல்லூரியின் ஸ்தாபகர், ஈழத்து சிறுவர் நாடக தந்தை என ஈழத்து நாடக வரலாற்றில் தவிர்க்க முடியாத மாபெரும் ஆளுமையான நாடகம் தந்த குழந்தை ம.சண்முகலிங்கம் யாழ்ப்பாணத்தில் (17) காலமானார்.

ஈழத்து நாடகத் துறையின் பிதாமகர் குழந்தை ம.சண்முகலிங்கம் நடிகராக நாடகாசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப் போதானாசிரியராக, நாடகக் களப்பயிற்சியாளராக, விமர்சகராக, உலக நாடக வரலாற்றாசிரியராக, மொழி பெயர்ப்பாளராக விளங்கியவர்.

அத்துடன் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் நாடக அரங்கக் கல்லூரி நிறுவுனராக, கல்விசார் அரங்கைப் பிரக்ஞை பூர்வமாக உருவாக்கியவர் என பல்பரிமாணமுடையவராக பல் துறை ஆற்றல் கொண்டவராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விருதுகளுக்கு என்றுமே சொந்தம் கொண்டாடாதவராக விளங்கிய அவர் எளிமையான வாழ்வு வாழ்ந்து, யதார்த்தத்தை படைத்தவர்.

### மண் பற்றுடன் வாழ்ந்த பேராளுமை

ஈழத்தில் ஏராளமான நாடக கலைஞர்களையும், படைப்புக்களையும் உருவாக்கிய பிதா மகன். தமிழ் தேசத்தின் துயர் சூழ்ந்த காலங்களிலும் வசதிகள், வாய்ப்புக்கள் இருந்தும் வெளிநாடு செல்ல மறுத்து கலைப் பணியாற்றியவர்.

நாடகமே தனது உயிர் மூச்சாக கொண்டு வாழ்ந்தவர். இன்று நாடகத்துறையில் சிறந்து விளங்கும் எத்தனையோ விற்பன்னர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் குழந்தை ம.சண்முகலிங்கம்.

ஈழத்தின் வரலாறு கூறும் நாடக எழுத்தாளர், நாடகப் பயிற்சியாளர், நாடக நடிகராக குழந்தை ம. சண்முகலிங்கம் விளங்கியவர்.

இவர் நாடகத்துறைக்கான பட்டப்படிப்பைக் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று முப்பது ஆண்டு காலமாக அதே பல்கலைக்கழகத்தில் நாடகத்துறை விரிவுரையாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

### மொழிபெயர்ப்பு நாடக விற்பன்னர்

பேராளுமை கொண்ட குழந்தை ம. சண்முகலிங்கம் இதுவரை நூற்றி இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கிறார். இவற்றில் சில நூலுருவிலும் வந்திருக்கின்றன. நாடக ஆசிரியர்களான சோபாக் கிளிஸ், இப்சன், அன்ரன்-செக்கோவ், பேட்டல்-பிரக்சட், தாகூர் ஆகியோரின் நாடகங்களில் சிலவற்றையும் சில யப்பானிய நாடகங்களையும் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.



1970களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஒன்றை நிறுவி நாடகத்தை ஒரு பயிற்சி நெறியாக தமிழ் கலைஞர்கள் மத்தியில் அறிமுகம் செய்தார். இந்தப் பணி மூலமாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே காத்திரமான நாடகத்துறை ஒன்று உருவாக இவர் காரணமாக இருந்திருக்கின்றார்.

1980களுக்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைத் தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்தி, இராணுவ அடக்குமுறை, பெண்களுக்கெதிரான அடக்குமுறை, மாணவர்களை அடக்கிய கல்வி அடக்குமுறை, சாதிய அடக்குமுறை, சமூகத்தின் போலித்தனங்கள் என்பவற்றையெல்லாம் தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இவர் எழுதி இயக்கிய "மண் சுமந்த மேனியர்" என்ற நாடகம் யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டியெல்லாம் மேடையேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் இவரது ஏனைய நாடகங்களான 'அன்னை இட்ட தீ' "எந்தையும் தாயும்" ஆகிய நாடகங்களும் மிகவும் பிரபல்யம் ஆனவை. அத்துடன் 1976 ஆம் ஆண்டில் வெளியான பொன்மணி இலங்கைத் திரைப்படத்தில் இவர் நடித்துள்ளார்.

ஈழத்தின் சிறுவர் நாடகத்தின் முன்னோடியான இவர் சிறுவர் நாடகங்களையும், பாடசாலை நாடகங்களையும் எழுதி இயக்கியிருக்கிறார். நாடகத்துறைக்கு இவர் ஆற்றிவரும் பணிக்காக கிழக்குப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கியிருந்தது.

மண் பற்றுடன் வாழ்ந்த பேராளுமையான குழந்தை சண்முகலிங்கம் எனும் பெருந்தகையின் இழப்பு, தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

# கசிப்பு விற்பனை செய்தவர் மல்வத்தையில் கைதானார்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த கசிப்பையும் மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று (18) சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 45 வயதுடைய சந்தேக நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 7,500 மில்லி லீட்டர் கசிப்பு மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருளுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கை மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவினர் பதில் பொறுப்பதிகாரி டி.கே.நந்தன தலைமையிலான பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

# மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய குளங்களான உன்னிச்சை மற்றும் நவகிரி உட்பட பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஆற்றை அண்டிய பிரதேசங்களில் மற்றும் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களை மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.சியாத் அவசர அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

நீர்மட்டம் அதிகரிக்குமாயின் தாழ் நிலப் பகுதிகளில் இருந்து வெளியேறி பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல தயாராக இருக்குமாறும் தெரிவித்துள்ளார். கடல், ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் நீராடுவதை தவிப்பதுடன் மீன்பிடி நடவடிக்கைகளில் மிக அவதானத்துடன் இருக்குமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.







# அட்டாளைச்சேனையில் இரத்ததானம் வழங்கல்

(நவாஸ்)

அக்கறைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வேண்டுகோளின்படி சின்னம்மா பௌண்டேசன் ஏற்பாட்டில் இன்று (19) அட்டாளைச்சேனை அந் நூர் மகா வித்தியாலயத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இரத்தம் வழங்குவதற்காக அந்தப் பிரதேச மக்களும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.





# மட்டு.ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் இன்று!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் ஆலயங்களுள் ஒன்றான மட்டக்களப்பு ஆரையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவனேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா இன்று ஞாயிற் றுக்கிழமை (19) நிகழ்த்தப்பட்டது.

இதன்போது சிவனேஸ்வரர் சமேத பரிபாரத் தெய்வங்களுக்கு சமநேரத்தில் குருமார்களால் திருக்குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டது.

இத்திருக்குட முழுக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர்.

ஆலயத் திருக்குடமுழுக்குக் கிரியைகள் யாவும் கண்டி முருகாமலை ஸ்ரீ முருகன் தேவாஸ்தான பிரதமகுரு குருதாஸமணி சிவஸ்ரீ இரா.சண்முகசுந்தரக் குருக்களின் அருளாசியுடன் பிரதிஸ்டா பிரதமகுரு கிரியா கலாநிதி வேத சிரோன் மணி அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ கணேச லோகநாதக் குருக்கள் தலை மையிலான குருமார் நிகழ்த்தினர்.





# கோவா வட பகுதியில் பாராகிளைடிங் விபத்து!

## இருவர் உயிரிழப்பு

கோவாவின் வடக்கு பகுதியில் பாராகிளைடிங் செய்து கொண்டிருந்த 27 வயது பெண் சுற்றுலாப் பயணியும் அவரது பயிற்றுவிப்பாளரும் பள்ளத் தாக்கில் விழுந்து உயிரிழந்துள்ளனர் என இந்திய பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் கெரி கிராமத்தில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விபத்தில் புனேவில் வசிக்கும் ஷிவானி டேபிள் என்ற பெண்ணும், அவரது பயிற்றுவிப்பாளரான 26 வயதுடைய நேபாள நாட்டைச் சேர்ந்த சுமால் நேபாலி என்ற நபருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

அவர்கள் ஒரு குன்றிலிருந்து பாராகிளைடர் பறக்க ஆரம்பித்த சிறுது நேரத்திலேயே பள்ளத்தாக்கில் வீழ்ந்து சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சாகசத்தை நடத்தும் பாராகிளைடிங் நிறுவனம் உரிய அதிகாரிகளிடம் முறையான அனுமதி பெறவில்லை என்றும், சட்டவிரோதமாக செயல்பட்டு வருவதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், அது சுற்றுலா பயணிகளுக்கு எந்த பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்படுகிறது.

இந்நிலையில், மனித உயிருக்கு ஆபத்து விளைவித்ததற்காக நிறுவனத்தின் உரிமையாளர் மீது மாண்ட்ரெம் பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# நடிகர் சைப் அலிகான் மீது தாக்குதல் நடத்தியவர் கைது!

கடந்த வாரம் போலிவூட் நடிகர் சைப் அலி கான் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபரை மும்பை பொலிஸார் இன்று அதிகாலை மகாராஷ்டிராவின் தானே பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

மொஹமட் அலியன் என்ற தாக்குதல்தாரி, நடிகரின் வீட்டிற்குள் நுழைந்து அவரை கத்தியால் குத்தியதை ஒப்புக் கொண்டுள்ளார் என மும்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபருக்கு பிஜோய் தாஸ், விஜய் தாஸ், மொஹமட் இல்யாஸ் மற்றும் பிஜே என பல பெயர்கள் இருப்பதாகவும் அவர், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை சைப் அலி கானின் பாந்த்ரா இல்லத்தில் நடந்த திருட்டு முயற்சியின் போது 54 வயதான நடிகர் கத்தியால் பல முறை குத்தப்பட்டார்.

பின்னர் அவர் சிகிச்சைக்காக மும்பை லீலாவதி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவருக்கு அவசர அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சைப் அலிகானுக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள் குழு, நடிகர் குணமடைந்து வருகின்றார் எனவும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்புவார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# தி.மு.கவில் இணைந்தார் திவ்யா சத்யராஜ்

நடிகர் சத்யராஜின் மகளும் ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் இன்று ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தார்.

இது தொடர்பாக தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“தமிழக முதல்வர், கழகத் தலைவர் முன்னிலையில், இன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜின் மகளும், ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் தி.மு. கவில் இணைந்தார்.

அப்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் சத்யராஜ் திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் அவரது மகள் திவ்யா இன்று தி.மு.கவில் இணைந்துள்ளார். சமீப காலமாகவே திவ்யா தனது சமூகவலைதளப் பக்கங்களில் அரசியல் பதிவுகளைப் பகிர்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஹமாஸுக்கு எதிரான போரை மீண்டும் ஆரம்பிக்கத் தயார்

## இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

இரண்டாம் கட்ட போர் நிறுத்தம் தோல்வியடைந்தால், ஹமாஸுக்கு எதிரான போரை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமது நாடு தயார் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காசா போர் நிறுத்த ஒப்பந்தம் அந்த நாட்டு நேரப்படி இன்று காலை 8.30 இற்கு ஆரம்பமானது.

இந்த நிலையிலேயே, ஊடகங்களுக்கு கருத்துரைத்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

போர் நிறுத்தம் தற்காலிகமானது எனவும், காசா மீதான தாக்குதல்களை மீண்டும் தொடருவதற்கான உரிமையை இஸ்ரேல் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸால் விடுவிக்கப்பட வேண்டிய பணயக் கைதிகளின் பெயர் பட்டியலைப் பெறும் வரை ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது எனவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஒப்பந்த மீறல்களை இஸ்ரேல் பொறுத்துக் கொள்ளாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸால் விடுவிக்கப்படவுள்ள 33 பணயக் கைதிகளின் பெயர் பட்டியல் ஏற்கனவே இஸ்ரேலிய ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ள போதிலும் குறித்த பட்டியல் அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படவில்லை.

அதேநேரம் இன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ள மூன்று பணயக் கைதிகளின் பெயர்கள் இதுவரை தங்களுக்குக் கிடைக்கவில்லை என இஸ்ரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.





# எரிபொருள் தாங்கிப் பாரவூர்தி வெடித்ததில் 77 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவில் எரிபொருள் தாங்கிப் பாரவூர்தி ஒன்று வெடித்ததில் 77 பேர் உயிரிழந்தனர்.

வட மத்திய நைஜர் மாநிலத்தின் சுலேஜா பகுதியில் நேற்றைய தினம் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பாரவூர்தியில் இருந்து எரிபொருளைச் சேகரிக்கச் சென்ற போது பாரவூர்தி வெடித்ததில் இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவத்தில் மீட்புப் பணியாளர்கள் உட்பட 25 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்கு விதிக்கப்பட்ட தடை இன்று முதல் அமுல்

அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்கு விதிக்கப்பட்ட தடை இன்று முதல் அமுலுக்குவரும் நிலையில், தனது சேவைகளை நிறுத்துவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களைச் சுட்டிக்காட்டி சீன செயலியான டிக்டொக் செயலிக்கு எதிராக, அமெரிக்க நாடாளுமன்றத்தில் அண்மையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த சட்டத்தின்படி, இன்றைய தினத்திற்குள் அந்த செயலியை அமெரிக்க நிறுவனத்திடம் விற்பனை செய்யாவிட்டால் பிளே ஸ்டோரில்




இருந்து டிக்டொக் செயலியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம், அந்நாட்டு அரசியலமைப்பை மீறும் வகையில் உள்ளதாகக் கூறி, டிக்டொக் நிறுவனம் வழக்கு தாக்கல் செய்தது.

அத்துடன் கருத்து சுதந்திரத்திற்கு எதிராகக் குறித்த சட்டம் உள்ளதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்தநிலையில் இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம், இந்த சட்டம் அரசமைப்பை மீறும் வகையில் இல்லை என தெரிவித்தது.

இதற்கமைய இன்று முதல் அமுலுக்குவரும் நிலையில், தனது சேவைகளை நிறுத்துவதாக டிக்டொக் நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 19/01/2025

## எல்லை பாதுகாப்பை பலப்படுத்தும் கனடா

எல்லை பாதுகாப்பை பலப் படுத்துவதாக கனடா அறிவித் துள்ளது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நாளை பதவிப்பிரமாணம் செய்து கொள்ள உள்ளார்.

02▶



# கனடாவின் முன்னாள் நிதியமைச்சர் கிறிஸ்டியா லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டி

**கனடாவின் முன்னாள் நிதியமைச்சர் கிறிஸ்டியா லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிட உள்ளார் என தெரி விக்கப்படுகிறது.**

**கிறிஸ்டியாவிற்கு நெருக்கமான வட்டா ரத் தகவல்கள் இந்த விடயத்தை தெரி வித்துள்ளன.**

**தாம் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்டால் சர்ச்சைக்குரிய கார்பன் வரி அறிவீட்டு திட்டத்தை ரத்து செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார் என அவருக்கு நெருக்கமானதரப்பினர்தெரிவித்துள்ளனர்.**

தாம் பொறுப்பினை எற்றுக்கொண் டால் கடுமையான தீர்மானங்களை எடுக்க திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண அரசாங்கங்களும் மத் திய அரசாங்கமும் இணைந்து செயல் படுத்தக்கூடிய கார்பன் வரி திட்டத்தை அமல்படுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலை மையிலான அரசாங்கத்தில் அங்கம் வகித்த போது கார்பன் வரியை அவர் சாதகமானது என குறிப்பிட்டு இருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் தற்பொழுது கார்பன் வரி விதிப்பு நுகர்வோரை பாதிக்காத வகையில் வடிவமைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் லிபரல் கட்சியின் தலைமை பதவி தொடர்பில் தீர்மானிக்கப்பட உள் ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் தேர்தலில் இருந்து முக்கிய வேட்பாளர்கள் விலகல்



கனடா பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்திருந்ததை அடுத்து புதிய தலைவர் ஒருவரை தெரிவு செய்ய முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தேர்தலில் இருந்து சில முக்கிய வேட்பாளர்கள் தேர்தலில் இருந்து விலகிக் கொள் வதாக அறிவித்துள்ளனர்.

கிறிஸ்டியா ஃப்ரீ லேண்ட், கரீனா கோல்ட் மற்றும் மார்கெனரி ஆகியோர் கட்சி தலைமை பொறுப்பிற்கு போட்டியிட உள்ளனர் என தெரிய வருகிறது.எனினும் இது குறித்து அதிகாரபூர்வமாக அவர்கள் இன்னமும் அறிவிக்கவில்லை.

03▶







# கனடாவின் சில பகுதிகளில் எரிபொருள் விலை அதிகரிப்பு

கனடாவின் சில முக்கிய பகுதிகளில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், நோவா ஸ்கோஷியா மற்றும் நியூ பிரவுன்ஸ்விக் பகுதிகளிலே இவ்வாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நோவா ஸ்கோஸியாவில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 3.3 சதங்களினால் அதிகரித்துள்ளது.

ஹாலிபெக்ஸ் பகுதியில் பெற்றோல் ஒரு லீற்றரின் குறைந்தபட்ச விலை 166.2 சதங்கள் என்பதுடன் ஒரு லீற்றர் டீசலின் விலை 4.1 சதத்தினால் அதிகரித்துள்ளது.

அத்தோடு, ஒரு லீற்றர் டீசலின் குறைந்தபட்ச விலை 197 சதங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரின்ஸ் ஒப் எட்வர்ட் மற்றும் நியூபிரவுன்ஸ்விக் ஆகிய பகுதிகளிலும் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








## எல்லை...

\(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோத குடியேறிகள் மற்றும் சட்டவிரோத போதை பொருள்கள் எல்லை பகுதிகள் ஊடாக கடத்தப்படுவது தொடர்பில் ட்ரம்ப் கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் காரணமாக கனடிய அரசாங்கமும் எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஓர் கட்டமாக அமெரிக்க புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவின் ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடிய அரசாங்கம் சட்டவிரோதக் குடியேறிகள் எல்லை தாண்டி பிரவேசிப்பதனை தடுத்து நிறுத்துவதற்கான மூலோபாயங்களை வகுத்து வருகின்றது.

உலங்கு வானூர்திகள் மற்றும் ட்ரோன்களை அதிக அளவில் பயன்படுத்தி எல்லை தாண்டி அத்துமீறி பிரவேசிப்போரை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத குடியேறிகளை தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.



# ரொறன்ரோவில் இந்த வார இறுதியில் கடும் குளிருடனான காலநிலை நிலவும்

கனடாவின் ரொறன்ரோவில் இந்த வார இறுதியில் கடுமையான குளிருடனான காலநிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளில் ஆர்க்டிக் காற்று வீசுவதால் கடுமையான குளிர் நிலவும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவல்களை கனேடிய சுற்றாடல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, வெப்பநிலை அதிகபட்சம் மறை 4 பாகை செல்சியஸாக குறையும் என்றும் இது மறை 10 பாகை செல்சியஸ் அளவில் உணரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஈரப்பதனின் அளவு அதகிரிப்பதனால் இன்று (19) மறை 20 பாகை செல்சியஸ் வெப்பநிலையை உணர முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், ஆர்க்டிக் காற்றின் ஊடுருவல் அடுத்த வியாழக்கிழமை (23) வரை நீக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.



## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே சில சிரேஷ்ட அமைச்சர்கள் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் கட்சித் தலைவர் பதவிக்காக போட்டியிடப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் முன்னாள் முதல்வர் கிறிஸ்டி கிளார்க் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என தெரிவித்துள்ளார். வெற்றிகரமான ஒரு பிரசாரத்தை செய்வதற்கு கால அவகாசம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தான் தலைமைத்துவ பதவிக்காக போட்டியிட போவதில்லை என தெரிவித்துள்ளார்.

அதேவேளை கைத்தொழில் அமைச்சர் சாம்பெனும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.